**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 9 February 2019

### சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் இரு புதிய பாடத் திட்டங்கள்

# பலதுறைத் தொழிற்கல்லூரி மாணவருக்கு அதிக இடங்கள்

தொழில்முனைப்பில் சிறப்பு ஆற்றலுள்ள பலதுறைத் தொழிற்கல்லூரி மாணவர்களுக்காக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்) புதிய மாணவர் சேர்க்கைத் திட்டத்தைத் தொடங்கி உள்ளது.

சிங்கப்பூரில் நிலவி வரும் தொழில்முனைப்புச் சூழலில் என்யுஎஸ் முன்னோடியாகவும் முக்கிய உந்துசக்தியாகவும் இருந்து வருகிறது. புத்தாக்க, தொழில்முனைப்புக் கட்டமைப்பில் சிங்கப்பூரை ஒரு சிறந்த இடத்தில் வைப்பதற்கு இத்தொழில்முனைப்பு பாடத்திட்டம் உதவும் என நேற்று திட்டம் குறித்து அறிவித்த என்யுஎஸ்சின் மூத்த துணைத் தலைவர் ஹோ டெக் ஹுவா விவரித்தார்.

உலகின் வெவ்வேறு வர்த்தகத் துறைகளில் தொழில்முனைவர்களைப் பேணி வளர்க்கும் நோக்கில் என்யுஎஸ் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

நாட்டின் ஐந்து பலதுறைத் தொழிற்கல்லூரிகளில் பட்டயக் கல்வி பயிலும் மாணவர்களில் தொழில்முனைப்புத் திறன் மேலோங்கிக் காணப்பட்டால் அவர்களை இத்திட்டத்திற்கு நியமனம் செய்யுமாறு என்யுஎஸ் கேட்டுக் கொள்கிறது.

தங்களின் பலதுறைத் தொழிற்கல்லூரிகளிலுள்ள தொழில்முனைப்பு தொடர்பான திட்டங்களில் பங்கேற்கும் மாணவர்களையும் இது உள்ளடக்கும்.

ஒவ்வொரு பலதுறைத் தொழிற்கல்லூரியும் 40 மாணவர்களை நியமிக்க, என்யுஎஸ் மொத்தம் 200 பேரை எதிர்பார்க்கிறது.

இப்புதிய திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் மாணவர்கள் என்யுஎஸ்சின் தொழில்துறைப் பங்காளித்துவ உறவுகளிலிருந்தும் அனுபவரீதியான தொழில்முனைப்புக் கல்வியிலிருந்தும் பலனடைவர் என்று பேராசிரியர் ஹோ கூறினார்.

அத்துடன் ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கவுள்ள கல்வியாண்டு முதல் என்யுஎஸ் மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பாடத்தை வடிவமைக்கும் திட்டம் குறித்தும் அவர் அறிவித்தார்.

பாடத்தை யாரிடமிருந்து, எவ்வாறு கற்றுக்கொள்வது என்னும் கூறுகள் தங்கள் பாடத்திட்டத்தின் ஓர் அங்கமாய் இருக்கும்.

இத்திட்டத்தின்கீழ் மாணவர்கள் தங்கள் தனிப்பட்ட அல்லது நிபுணத்துவ வளர்ச்சிக்கு ஏற்ற பாடங்களைப் பயிலலாம்.

நிதித் தொழில்நுட்பம், நகர்ப்புற நிலைத்தன்மை, நுண்கலைகள் போன்ற துறைகள் சார்ந்தோரைச் சிறப்புப் பேச்சாளராகவோ கற்றுத் தரும் ஆசிரியராகவோ மாணவர்கள் அழைக்கலாம்.

என்யுஸ்எசின் சென்ற ஆண்டுக்கான மாணவர் சேர்க்கையில் 7,800 பேரில் 1,200 பேர் பலதுறைத் தொழிற்கல்லூரி மாணவர்கள். இப்புதிய தொழில்முனைப்புத் திட்டத்தால் இந்த எண்ணிக்கை இவ்வாண்டு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பத்தைக் கருத்தில் கொண்டு தங்களின் கற்றல் பயணத்திற்குத் தாங்களே உரிமை எடுத்துக்கொள்வதற்கு இப்புதிய திட்டங்கள் கைகொடுக்கும் என்று பேராசிரியர் ஹோ கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.